உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௪. } பரீதாபி௵ தைமீ { பகுதி ௧௦.

உபாத்திம-மாணவர்களுக்கோர் உபதேசம்.

(276-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, நான் சொல்லப்போகும் விஷயம், கற்பிப்பதில் சித்தி பெறும் விதமே. எனது நல்லாசிரியரை நோக்கி "ஐயா! மந்தனுக்கும் எளிதில் பொருள் விளங்க நீங்கள் எவ்வாறு செய்து விடுகிறீர்கள்?" என்று நான் கேட்க, அவர், "என் மனைவி எனக்குக் கற்றுக் கொடுத்தாள்" என்றார். ஆச்சரிய முற்ற நான், "அஃதெப்படி?" என்றேன். அவர் "ஒவ்வொரு இரவும், மறுதினம் நான் கற்றுத்தர இருக்கும்விஷயத்தை என் மனைவிக்குக் கற்பிப்பேன், விளங்காத இடங்களை என் மனைவிபடும் கஷ்டங்களிலிருந்து அறிந்து அவை விளங்குமாறு அவளுக்கு எடுத்துரைப்பேன். அவளுக்கு விளங்காத இடமே பெரும்பாலும் மாணவர்க்குப் விளங்காதிருக்கும். அவளுக்கே விளங்கும்பொழுது மாணவர்களுக்கு, அவை, நன்கு போதித்தவுடன் விளங்கக் கேட்பானேன்? இவ்வாறு அற்ப அறிவு படைத்தவரும் அதி புத்திசாலிகள் ஆவர்" என்றார். நண்பர்களே! பாருங்கள் இவர் ஒரே முயற்சியில் இரண்டு காரியங்கள் சாதித்ததை! —மனைவிக்குக் கல்வி புகட்டினார்; மாணவர்களுக்கும் கற்பித்தார்.—இதனால் ஆண்மக்கள் கல்வியும் பெண்மக்கள் கல்வியும் ஏககாலத்திற் பரவின. "ஆண்கல்வி பரவினது உண்மையே. பெண்கல்வி ஒருத்திக்கே கற்றுத் தந்தால் எவ்வாறு பரவும்?" என்று நீங்கள் ஐயமுறலாம். எப்படியெனில்,

இவ்வொருத்தியின் மூலமாக அவள் தோழிகளும் அத்தோழிக ளின் மூலமாய் அவர்கள் தோழிகளும, அவ்வாறே அத்தோழிகளின் தோழிகளும் விஷயம் அருமையா யிருந்ததால் கற்றுக் கொண்டார் கள்: பெண்கள் சுபாவம் பெரும்பாலும் வம்படிப்பதாதலால் வெறும் வாயை மெல்லுபவர்கள் அவல்வாயை மெல்லுவதும் ஓர் ஆச்சரி யமா? வீண் வமபில் காலத்தைப் போக்குவதை விடப் பயனுள்ள காரியங்களில் காலத்தைச் செலவழிப்பதால் நாட்டிற்கு எவ்வளவு நன்மை யுண்டாகும் பாருங்கள்! உங்கள் தாய், சகோதரி, மனைவி யாதி யோருக்கும் இவ்வாறு பயிற்றிப் பயனுற்றப் பாருங்கள்.

பெண் கல்வியை அபிவிருத்தி செய்வதால் நான் ஏற்கனவே சுட்டியுள்ள அதி முக்ய விஷயமான "பிள்ளைகட்குப் பெற்ரோர் விசாரணையின்மை." என்ற பெருங் குறையை நிவிர்த்தி செய்தவர்க ளாவீர்கள். நம் அதிர்ஷ்ட வசத்தால் ஆடவர் வயிற்றுப்பாட்டிற்கும் ஆஸ்தி தேடுவதற்கும் அலையவும், பெண்டிர் அவர்களை உண்பித்தும் அவரையும் அவர் தேடுவதையும் பேணி வரவும் ஏற்பட்டவர்களா யிருக்கிருர்கள். நம் தேசத்தில் புருஷன் வெளியில் சர்வாதிகாரமும் வகிப்பவனுகக் காணப்பட்டபோதிலும், வீட்டில், தான் உட் பட, அதில் சம்பந்தப்பட்ட யாவினும் மனைவியின் ஆணையே செல்லுகிறது. ஆதலால் அவள் மனக் கண்ணை விசாலியுங்கள். அவ்விதம் செய்வீரேல் புதல்வரைக் குறித்த அக்கரை உங்கட்குக் குறைந்தாலும் அதற்கேற்ப அவர்களுக்கு அதிகரிக்கும். உயர்தரக் கல்விகள் பெறும் வரையாவது நம் பெண்டிரே அவர்களைப் பார்த்துக் கொள்ளக்கூடும். இவ்வித மேற்படுவதும் நன்றே: அச்சுறுத்தி மக்களைத் தந்தை ஆளுகிருன்; தாயோ தனது தெய்வீக அன்பினுல் பிள்ளையை வசப்படுத்துகிருள். கல் நெஞ்சன் மனத்தையும் கரை த்து அவனைத் தனது பேரன்பினுலேயே நல்வழிப்படுத்தக் கூடிய வன்மை நற்ருய் ஒருத்திக்கே உண்டு.

இனி உங்களையே பற்றி ஒரு வார்த்தை சொல்வேன். நீர் உயரத்திலிருந்து கீழ் இறங்குகிறதென்பது நீங்கள் அறிந்த விஷ யம. இதை உங்கள் அனுஷ்டானங்களிலும் பொருத்திப் பாருங்கள். நீங்கள் படித்ததோடும் கற்றதோடும் திருப்தியடையாதேயுங்கள்.

"கட்டிக்கொடுத்த சோறும் கற்றுத்தந்த சொல்லும் நெடுநாளைக்கு நில்லா என்பது நீங்கள் அறியாததன்றே? நீங்கள் கற்க எவ்வளவோ இருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கற்கிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு உங்கள் போதனா சக்தியும், எளிதில் விளங்கச் சொல்லும் ஆற்றலும் மிகும் என்பதை உணருங்கள்.

இதனினும் அதிகமாகக் கவனிக்க வேண்டிய அதி முக்கிய விஷயம ஒன்றுண்டு. உங்களிடம் கற்கும் சிறுவர்களைக் "குருட்டுப் பாட சாஸ்திரிகள்" ஆக்காமல், மேன்மேலும் கற்கவும் விஷயங்களை அறியவும் அவாக்கொள்ளுமாறு செய்யுங்கள். பிள்ளைகள் தம் யோசனா சக்திக்கேற்பக் கேள்வி கேட்கும்போது, அவர்களை அதற்காகக் கண்டிக்கவாவது அதட்டவாவது செய்யாமலும், "இது உன் பாடமில்லை; பாடத்தையே அறிந்துகொள்ளவில்லையாம்! மேலேபோய் விட்டானாம்" என்று வெடுக்கென்று விழாமலும், கேட்கும் விஷயத்தை விளக்கி அவர்கள் அறிவை விசாலியுங்கள். வருடாந்தப் பரீக்ஷை முடிவு ஒன்றை மட்டும் கருதாமல், மாணவர்க்குப் புதிது புதிதாகக் கேட்டறியும் அவாவை விருத்திசெய்பவனே உபாத்திமத் தொழிற்குரியவன். இதனால் பரீக்ஷை முடிவைத் தாழ்வுபடுத்திக் கூறியதாக எண்ணாதீர். என்ன இருந்தாலும் கலாசாலை அதிகாரிகளிற் பெரும்பான்மையோர் பரீக்ஷை முடிவு ஒன்றினாலேயே உபாத்திமத் திறமை, பிள்ளைகளின் ஆற்றல், முதலியவற்றை நிதானிக்கின்றார்கள். என்னுடன் படித்தவர்களில் அநேகர் அநியாயமாய் அறிவு விருத்தியின்றிக் கலாசாலைகளிற் கற்றதைக் காட்டிலும் ஒரு அக்ஷரமாவது அதிகமாகக் கல்லாதிருப்பதைக் காண என் மனம் வருந்துகிறது. ஐந்து வருஷத்திற்கு முன் படிப்பை நிறுத்திய 5-வது பார மாணவர்களில் சிலரை நான் சந்தித்துப் பேசிய காலையில் அவர்களுக்கு ஜப்பான் எங்கிருக்கிறதென்பது கூடத் தெரியவில்லை. ஐரோப்பா கண்டமே அவர்களுக்கு நடத்தப்பட்டதால் இது தெரியவில்லையாம். இவர்கள் பேரிற் குற்றமில்லை. வறுமைப் பிணியால் படிப்பை நிறுத்திய இவர்களுடைய உபாத்திமார்களே குற்றம் சாட்டப்படற்குரியர். நிற்க,

உங்களுக்கே ஆவலும் அக்கறையும் இருந்தால்தான் மற்றவர்களுக்கு நீங்கள் ஆவல் உண்டாக்க முடியும். ஒரு உதாரணம் உங்க

ட்கு எடுத்துரைப்பேன். சீமையில் தொழிற்கட்சித் தலைவராகிய கேர்ஹார்டி (Keirhardi M. P) யை உங்களிற் சிலர் நேரிற் கண்டிருக்கலாம். காணக் கொடுத்துவையாமற் போனபோதிலும் அவரைப்பற்றிப் பத்திரிகைகள் வாயிலாகவாவது அநேகர் கேள்வியுற்றிருக்கலாம். அவர் 4 வகுப்பிற்கு அதிகம் படித்தவர் அல்லர் ஆயினும், தற்பயிற்சியினாலேயே ஷேக்ஸ்பியர் கிரந்தங்களையும். தெளிவுபெற அறிந்துணர ஆற்றல் படைத்தவர். அவர் நாளைக்கும் அவற்றை விரும்பிப்படித்து வருகிறார். ஷேக்ஸ்பியர் நூல்களைப் பற்றி அவர் அறிந்ததுபோல எவரும் அறியவில்லை என்பேன். சர்வகலாசாலை மாணவன் கூட இவ்வளவு அக்கரையாய்ப் படிக்கக் கேட்டிலேன்.

விஷயங்களை மேன்மேலும் அறிய உங்களுக்கு ஆவல் இல்லாவிடில் மாணவர்களுக்கு ஆவல் புகட்ட உங்களால் முடியாது. நீங்கள் படித்த அளவில் உங்களுக்கே திருப்தியில்லை யென்பதையும் மேன்மேலும் நீங்கள் கற்கவிரும்புகிறீர்கள் என்பதையும் உங்கள் செய்கையாற் காட்டுங்கள். அவர்கள் உங்கள் உதாரணத்தைப் பின்பற்றி நல்வழிப் படுவார்கள் என்பது திண்ணம்.

வேண்டுவதற்கு அதிகமாகக் காலம் தாழ்த்தி இன்று அக்ராஸநாதிபத்யம் வகிக்கும் மகா-ா-ா-ஸ்ரீ கனம் குருசாமி ஐயர் அவர்களின் அதிநுட்ப சாதுர்ய உபதேச மொழிகளைக்கேட்க ஆவலுடன் இருக்கும் உங்களுக்கும் அருவருப்பு உண்டாக்கத் துணியேன் ஏனெனில் அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும். அதுவும் என்போன்ற உபாத்திமத் தொழிலையுடைய ஒருவன் அத்தொழிலைப் பற்றி நீட்டித்துப் பேசின் கட்டாயம் வெறுப்புப் பிறக்கும் ஆதலின் இச்சுபதினத்தில் முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சிறிது கூறி நிறுத்துவேன்:

இன்று மாட்சிமை தங்கிய மகா சக்கரவர்த்தியவர்கள், சரித்திரப்பிரதானமும், இந்துக்களுக்கு மகிழ்ச்சியுடன் ஞாபகம்வரக்கூடியதுமான பூர்வீக அஸ்திநாபுரமாகிய டில்லி மாநகரில் பிரஜைகள் மனமகிழ்க, "பல வேறுபட்ட இந்த இந்திய ஜனசமூகம் ஒன்று" என்பதைக் காட்டும் அறிகுறியாய்ச் சிங்காதனமேறிய மகோத்ஸவத்

தை மனத்திருத்தும் நாளாகும். உங்களுக்கு ராஜபக்தி போதிப்ப தானது சூரியனைப் பிரகாசிக்கவும், நக்ஷத்திரங்களை மின்னவும் சொல்வது போலாகும். ஏனெனில், மேற்றிசையோர் கொடுங்கோலரசு முடியரசு, குடியரசு இவைகள் மாறி மாறித்தொன்று தொட்டு வரும் ராஜரீகத்தைக் கொண்டவர்களாயிருக்க, நம் தேசத்தில் புராணகாலம் தொட்டு நாளது பரியந்தம் பிரஜாப் பரியத்தனத்தால் டார்க்வினைப் போல ரோமபுரியினின்றும், இரண்டாவது ஜேம்ஸ் அரசனைப் போல இங்கிலாந்தினின்றும் துரத்தப்பட்டும், ஸர்வியாதேசத்து அலெக்ஸாண்டர் அரசனென்ன, பிரான்ஸு தேசத்து லூயி அரசனென்ன, நமது இங்கிலாந்து தேசத்து சார்லஸ் அரசனென்ன, இவர்களைப்போல், வியாஜமாகவேனும், சதியாகவேனும், படுகொலை புரியப்பட்டும், இவ்விதமான அநாகரீக பாபகரசெய்கைகள் நடந்ததாக யாம் கதையிலும் கேட்டிலேம். நம் தேயத்தார் "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்னும் கொள்கை வம்ச பரம்பரையாய்ப் பாலுடனே ஊட்டப் பெற்றவர்களாயிருக்கிறார்கள். நம்முடைய மகா காருண்ய முள்ள ஜார்ஜ் அரசர் முன்பு ஆண்டு முடிதரித்தோர் யாவரினும் காருண்ணிய மிக்கார். அவர் நம்மைத் தக்க வண்ணம் அறிவதற்கு அருமையான சிரமம் எடுத்தவர் என்றும், நம் மனோரதத்தைப் பூர்த்தி செய்வதில் திருப்திபுடையவர் என்றும், பின் சொல்லும் செய்கையாலேயே வெளியாகும்.

சர்வ வியாபியாகிய "ராய்ட்டர்" கம்பெனியார் அணுவையும் அண்டமாக்கி "ராஜாங்க கொலை" "அராஜரீகம்" இந்தியாவில் நடைபெறுகிற தென்று தினை தினை குடல் நடுங்கும் தந்திமாரிகள் பொழிய ஒருசார், கிராமபோன்போல் இந்தியரிடத்து உண்மைப்பற்றில்லாத சில ஆங்கிலேய-இந்திய பத்திரிகைகள் இதற்கு "ஓம்" என்று பல்லவிபாட, இத்தருணத்தில் இந்தியாவை நேரிற்காண விஜயஞ் செய்யத் துணிந்து தீர்மானித்த நம் அண்ணலின் ராஜ தைரியம் என்னே! என்னே!. சுத்த ராஜத்துவம் அவருடைய ஒவ்வொரு செய்கையிலும் ஒவ்வொரு அருமையான வார்த்தையிலும் பிரசித்தியாயிற்று. புண்பட்ட இடம் எங்கு என்று கண்டார், அதைத் தம்முடைய பிரசன்னத்தினாலும் ஆற்றினார். அதன் பயன் அவருடைய சுத்த தீர ராஜத்துவத்தை லோகப்பிரசித்த மாக்கியது. யார்

எவ்விதம் அபிப்பிராயப்பட்டபோதிலும், பிரிட்டானிய ராஜ்ய விஷயமாக, அரசன் மந்திரிகளின் மதிகொண்டு ஒழுகியபோதிலும், இந்தியா சம்பந்தமான விஷயத்தில் மந்திரிகட்கு, தம் மதிக்கோலால், அரசராகிய அவர் வழிகாட்டுகிறார் என்ற தீர்மான எண்ணம் சகலர் மனத்திலும் மறுக்க ஒண்ணாது குடிகொண்டிருக்கிறதென்பது திண்ணம். கேவலம் லோகாயத ஞானத்தையே மிகுதியும் கொண்ட சில மூட பத்திரிகைகள் நம்முடைய இயற்கை ராஜவிசுவாச அறிவை மறந்து, இந்தியர் பலாபேக்ஷை கருதியாவது ராஜபக்தியுடையவராயிருத்தல் அவசியமென்றும் வேறெவ்வரசர் ஆட்சியிலும் இவ்வளவு சுயேச்சையும், சுபிக்ஷமும் பெறவே முடியாதென்றும்,வெகு சிரமப்பட்டு நெடிய வியாசங்கள் எழுதிப்போதிக்க வருவது எனக்கு ஒருவாறு சிரிப்புண்டாக்குகிறது. ஆங்கில ராஜரீக தத்துவ சாஸ்திர உணர்ச்சி மிக்காரான (Fox) பாக்ஸ் ஷேரிடனென்ன,லாக்,பெந்தம் என்ன,மில்,மார்லி என்ன,இத்தியாதி நதிக்கில் தெள்ளிய நீரையுண்டு, ஆவேசத்தால் அம்மகான்கள் கூறியிருக்கும் தத்துவத்தின்படியே ஆத்திர அவசரப்பட்டு ஆர்க்கும் சிலருடைய காரணத்தினாலேயே நம்மை அராஜரீகர்களென்று ஏகதேசமாய் நம் விரோதிகள் நமக்கிடும் பட்டத்தை அவர் சிறிதேனும் ஏற்கவில்லை. இவர்களிடத்துக்கூட நமது சக்கரவர்த்தியார் தமது பரிதாபத்தைக் காட்டினார். அவர் மந்திரிமார், இவ்வித நவீன இந்திய உணர்ச்சிக்கு ஆங்கிலத்தாரே குருவாதலாலும், ஆங்கில அரசாட்சியே அதை வளர்த்ததனாலும், "நீவிர் கேட்பது அவசரப்படாதிருப்பின் காலத்திற்கேற்ப கொடுக்கப்படு"மென்றும், உறுதி கூறினார்கள். வெடிகுண்டும், படுகொலையும் பிரமிக்கச் செய்யும் பங்காளத்தில் சென்றபோது, தாம் அவர்களுடைய அன்பிற்கும் ஆர்வத்திற்கும் உரிய உத்தம சக்கரவர்த்தி என்றும், 'இந்தியர் குணத்தை மந்தமதியால் துவேஷித்த தீயர்கள் கொண்ட எண்ணம், தவறு' என்றும், லோகப்பிரசித்தமாக்கும்பொருட்டே மெய்காப்பாளரும் புறஞ்சூழாது தன்னந்தனியராய் அச்சமின்றி உலாவினார்.

டிசம்பர்மீ 12உ யாகிய இன்று யார்க்கும் மகோத்ஸவநாளே. அதிலும்,உபாத்திமைத் தொழிலுடைய நமக்கும், மாணவர்களுக்கும்

இது அதி முக்கியமான தினம். ஏனெனில், சென்ற வருஷம் இத்தினத்தன்றோ நமது வள்ளல் வித்தியாபிவிர்த்திக்காக இந்திய வருமானத்தில் பிரத்யேகமாக 50 லக்ஷ ரூபா செலவுசெய்யக் கட்டளையிட்டது.

இனி இப்புனித பூமியைப்பற்றியும், இப்புவிதாங்கும் ஒப்பிலாச் சக்கரவர்த்தியைப் பற்றியும், சில வாழ்த்துக்கள் கூறி என் பேச்சை நிறுத்துகிறேன். என்னையும் மதித்து இச்சபையில் உபந்நியாசம் செய்யக் கேட்டுக் கொண்ட பெரியோர்களுக்கும் எனது பேச்சு முடியும் வரை பொறுமையோடு சலியாது செவிகொடுத்த இச்சபையிலுள்ளோர்க்கும் மனப்பூர்வமான வந்தனங்க ளளிக்கிறேன்.

பத்திராதிபர்.

மாலினீ மாதவம்.

அத்யாயம் 19.

அந்த ஸ்த்ரீயின் கதை.

The Story of that Woman.

(287-ம் பக்கத்தொடர்ச்சி.)

தன் நயம் என்பதே ஸமஸ்த ஜீவராசிகளின் ப்ரவிருத்திகளுக்கும் ஸகஜமான காரணமென்பது யாவரும் அறிந்த விஷயம். இம்மன தத்வ ரகஸ்யத்தை இவ்வாறு துணிவாய்க் கூறுவது கேட்போர்க்கு முதல் முதல் விசேஷ ஆச்சர்யத்தை விளைக்கத்தக்கதே. பிறர் நன்மையே ப்ரதானம் என்று வாதிக்கும் ஸர்வ ஹிதவாதிகளும் (Utilitarians) எல்லாம் ஒன்றுதான் என்று கூறும் வேதாந்திகளும் கூடப் பெரும்பாலும், இம்மஹா விதிக்குட்பட்டுத்தான் உழல்கின்றனர். உலகத்தின்கணுள்ள மனிதர்களின் ப்ரவிருத்தி

களையும், அவர்கள் பரஸ்பரம் நடந்துகொள்ளும் முறைகளையும் ஒருவாறு நுட்பமாய் ஆராய்ச்சி செய்யப்புகின் இம்மஹா தத்வத்தின் உண்மை தெளிவாய் விளங்கும். இப்பெரிய ஸித்தாந்தத்தை இச்சிறு நாவலில் வ்யவஹரிப்பது அசந்தர்ப்பமாகவும், அரஸிகமாகவும் தோன்றுமாதலால், அதைப்பற்றி வேறு சந்தர்ப்பங்களில் வியவஹரிப்போம். இம்மஹா ஸித்தாந்தமானது சொன்ன மாத்திரத்தில் நிராக்ஷேபமாய் யாவராலும் அங்கீகரிக்கத்தக்கதென்பது நமது அபிப்பிராயமன்று. இந்த ஸித்தாந்தத்திற்கு எண்ணிறந்த ஆக்ஷேபங்களும் ஸமாதானங்களும் மனோ வித்யாநிபுணர் (Psychologists) கூறியிருக்கின்றனர். எத்தனையோ பேர் பரோபகாரிகளாய் உலகத்தில் இருக்கின்றனர். எத்தனையோ பேர்கள் நலங்கருதிப் பரோபகாரிகள் போலப் பாசாங்குசெய்துதிரிவோருமுண்டு. நிற்க,

நமது வேஷதாரி, சற்றுநேரம் அப்பெண்ணை உற்றுப்பார்த்துவிட்டுப் பிறகு "பெண்ணே! நீ யார்? இவ்வாறு தனிமையாய் இங்கு அடைபட்டிருப்பதற்குக் காரணமென்ன?" என்று இரக்கத்துடனும் கொஞ்சம் அதிகார தோரணையுடனும் வினவ, சாவி கொடுத்த (Gramaphone) பேசும் வாத்யம் போல தன் விருத்தாந்தங்களைப் பின் வருமாறு உரைக்க ஆரம்பித்தாள்.

"ஐயா! என் சரித்திரமானது சுமார் 20 வருஷங்களுக்குமுன் முதல் ஆரம்பிக்கின்றது. அக்காலத்தில், என் தாய் தந்தையர் விருத்தாப்பியர்களாயும், மிக்க எளியவர்களாயும், அஹர்யாஸ காலக்ஷேபஞ் செய்துவந்தார்கள். எங்கள் குடும்பத்தில் என் பெற்றோர்களும், நானும், என் தமயனும் மாத்திரம் இருந்தோம். என் தமையன் இம்மலைமீதுள்ள கிருஷ்ணன்கோவில் மணியம். அவன் சம்பாதித்து வந்த சொற்ப வருமானத்தைக் கொண்டு நாங்கள் நாணயமாய்க் காலங்கழித்து வந்தோம். நான் கன்னிப்பருவம் கழிந்து யுவதியானேன். ஏழையாய்ப் பிறந்தவளாயினும் அக்காலத்தில் நான் பார்க்க அழகாயிருந்தேன்.

என் தமையன், தன் வேலைக்குப்போய் இரவு 9மணிக்குப் பிறகு தான் திரும்புவான். சிலநாள் வராமலே இருந்துவிடுவான்.

நானும் என் தாய் தந்தையருக்கு வேண்டிய உதவிகள் செய்துவிட்டு பக்கத்திலெங்களுக்குச்சொந்தமானசோளக்காடு முதலியவற்றிற்குப் போவதுண்டு. அக்காலத்தில் இந்த மணிபுரம் ஜமீனைச்சேர்ந்த ஓர் உத்யோகஸ்தன் அங்கேவரத்துப்போக்குண்டு. அவன் என்னை விவாகம் செய்துகொள்வதாயும், ஜமீன்தார் தயவின்மேல், என்னை நற்பதவிக்குயர்த்துவதும் தவிர, என் குடும்பத்தையும் வறுமையினின்றும் மீட்பதாயும் வாக்களித்தான். அவன் மிக்க அழகாயிருந்தான். வறுமையின் கொடுமையுடன் யௌவனத்தின் கொழுப்பும் அதிகரித்து விட்டபடியால், எங்களிருவருக்கும் சரீரசம்பந்தம் ஏற்பட்டு விட்டது. கல்யாணமாகு முன்னமேயே கர்ப்பிணியாய் விட்டேன். கர்ப்பம் நாளுக்கு நாள் விருத்தியடைந்தது. பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் தெரியாமல் எத்தனைநாள் காப்பாற்றுவது ? என் நிலைமையைப்பற்றி பயபக்தியுடன், என் காதலனிடம் பிரலாபித்து என்னை அதிசீக்கிரம் விவாகம்செய்துகொண்டு என் மானத்தைக் காப்பாற்றும்படி நான் பலவாறு வருந்திக்கேட்டேன்.

ஐயோ! அப்பொழுதுதான் புருஷர்களுக்கு இயற்கையாயுள்ள வஞ்சகம் எனக்கு வெளியாயிற்று. பேர் இடி படீரென்று விழுவது போல அவர் பதில் என்மனதைத் திடீரென்று பேதித்தது. அவர் தான், மணிபுரம் ஜமீன்தார் ராமராஜனென்றும், ஜாதி முறைப்படி இருவரும் விவாகம்செய்துகொள்ளத்தகுதியில்லையென்றும், ஆனால் என்னைப் போகஸ்திரீயாய் மாத்திரம் எப்பொழுதும் கைவிடாது ஆதரிப்பதாகவும் வாக்களித்தார். ஆக்ஷேபம் சொல்லுவதற்கோ அவகாசமில்லை. என்கர்ப்பம் விருத்தியடைந்து விட்டது. உடன் பட்டேன். என் தாய்தந்தையரையும் என் தமயனையும் துறந்தேன். என் ஆசைக்காதலனோடு காம வெறியால் ஓடிவிட்டேன். என்னையோர் சிறிய அரண்மனையில் வஸிக்கச்செய்து அதிக அன்புடன் அவர் என்னைப்பாதுகாத்துவந்தார். சிறிது நாளைக்கெல்லாம் என்னைப்பிரிந்த சோகத்தாலோ அல்லது தங்கள் குலத்துக்கு என்னால் நேர்ந்த அவமானத்தாலோ, அல்லது எக்காரணத்தாலோ என் தாய் தந்தையர் இறந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். சரியானகாலத்தில் எனக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது, இக்குழந்தை பிறந்த ஒரு மாதத்துக்

ஜெமீன்தாரிணிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஜமீன் தார் என்னைத்தன் அரண்மனைக்கே அழைத்துச் செல்வதாயும், தன் பக்கத்திலேயே வைத்துக்கொள்வதாயும், நான் ஒரு செவிலித் தாயெனச்சொல்லி தன் மனைவிக்கும் எனக்கும் சிநேகம் செய்விப்ப தாயும் சொன்னர். அதற்கும் உடன்பட்டேன். அவ்வாறே நடந்தது. நானும் ஜமீன்தாரிணியும் சகோதரிகள்போல அந்யோந்யமாய் வாழ் ந்துவந்தோம். தெய்வத்துக்குப் பொறுக்கவில்லை. ஒருநாளிரவு தன் மகனை என்னிடம் ஒப்புவித்துவிட்டு, ஜமீன்தாரும் அவர்மனைவியும், "ஐவர் மலை" கிருஷ்ணன் கோவில் உத்ஸவத்துக்குச் சென்றார்கள். சுமார் இரவு 7 மணிஇருக்கலாம். ஓர்பாதகன் திடீரென்று உள்ளேபுகு ந்து என் அருமை மகளண்டைவந்து தன்கையிலுள்ள ஓர் பாலாடை யால் ஓர் ஔஷதத்தை பலாத்காரமாய் அதன் வாயில்செலுத்திவிட்டு வெளியே சென்றான். குழந்தையின்கண்கள் சுழன்றன. கைகால்கள் பதறின. சற்று நேரத்தில் ப்ராணனை விட்டது. சிறிது நேரத்தில் அரண்மனை முழுதும், ஜமீன்தார் குழந்தை யிறந்துவிட்டதாகவும், மாந்தத்தால் இறந்ததாகவும் வதந்தி பரவிற்று. அதனால் கொலை செ ய்ய யத்தனித்தது ஜெமீன்தாரின் மகனை, யென்று அறிந்துகொண் டேன். ஆனால் இறந்தது என் பெண்குழந்தை, இறந்தது விஷத் தால். மாந்தத்தாலன்று. இரண்டுமணி நேரங்களாயின. ஜமீன்தா ரும் ஜமீன்தாரிணியும் கள்ளர்களால் கொலை செய்யப்பட்டார்களெ ன்றும் கேள்விப்பட்டேன்.

ஏதோ ஓர் பெரும் கொடிய சதி ஆலோசனையால் இவை யெல்லாம் நடக்கின்றனவென்றுணர்ந்தேன். அவ்விரு குழந்தை களையும் என் இரட்டைப்பிள்ளைகளைப்போல அவ்வளவு அன்புடன் நான் வளர்த்து வந்ததால், இறந்து போன என் பெண் குழந்தை நிமித்தமாயாவது அல்லது ஜமீன்தார், ஜமீன்தாரிணி இவர்கள் நிமித்தமாவது துக்கப்படத்தோன்றவில்லை. அதில் புத்தி செல்ல வுமில்லை. அதற்கு ஸாவகாசமுமில்லை. என்னமாயமோ! உயிர்த் திருக்கும் ஜமீன்தார் புத்திரனையாவது காக்கவேண்டுமே என்பதில் மாத்திரம் என்புத்தி சென்றது. அதிகமாய் வளர்ப்பதேன்! இறந் துபோன என் குழந்தையை யவ்வாறே மூடிவைத்துவிட்டு, ஆண்

குழந்தையை யெடுத்துக்கொண்டு யாவருமறியாமல், அவ்வரவிலேயே வெளியேறிவிட்டேன். இராமுழுமையும் எங்கெங்கே சுற்றித்திரிந்தேனோ எனக்குத்தெரியாது. மறுநாட்காலையில் ஓர் அடர்ந்தவனத்துக்குள் நான் ஸஞ்சரிக்கக் கண்டேன், உண்மையோ, அல்லது நினைவோ, என்னை யாரோ சிலர் பின் தொடர்ந்துவருவதாயும் உணர்ந்தேன். திக்கற்றவளுக்குத் தெய்வமே துணை யென்றபடி, திடீரென்று என் தமயனைப் பரதேசிக் கோலத்தோடு ஸந்தித்தேன். அடியம்மா! என்றலறிக்கொண்டோடிவந்து அவர் என்னைக்கட்டிக் கொண்டார். கருமமே கண்ணாயின நான், ஒன்றும் பதில் சொல்ல வாயெழாமல் "அண்ணா! இதற்கெல்லாம் இது சமயமல்ல. மலையருந்து மயிரிழையில் தொங்குவதுபோல, அபாயமானது நம்மைப் பின்தொடர்ந்து வருகின்றது. என்னையும் இக்குழந்தையையும் எப்படியாவது காப்பாற்றவேண்டும்" என்று சொல்லியக்குழந்தையை யவர் கால்மீது போட்டு, நானும் அவர் பாதங்களில் வீழ்ந்தேன். என் வார்த்தைகளைக்கேட்ட என் தமயன் ஒன்றும் மறுமொழி கூறாமல் குழந்தையைக்கையிலேந்திக்கொண்டு வேகமாய் மணிபுரம் எல்லைக் கப்பால் ஓடினார். நானும் பின்தொடர்ந்து ஓடினேன். இவ்வாறு இரண்டு தினங்கள் சென்று கடைசியாய், பாலூர் ஜமீன் வந்து சேர்ந்தோம். அப்பொழுது பாலூர் ஜமீன்தாரும் புதிதாய் விவாகமான அவர் இன்ப மனைவியும் ஏகாந்தமாய்ச் சிங்காரவனத்தில் உலாவிக் கொண்டிருந்தார்கள். என் தமையன், குழந்தையை யவர்கள் பாதங்களில் வைத்து, நமஸ்கரித்து, மகராஜ ப்ரபோ! இக்குழந்தைக்கும் இப்பெண்ணுக்கும் அபாயம் பலமாய் நேர்ந்துகொண்டிருக்கின்றது. மகராஜாதான் எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று வருந்திக் கேட்டார்.

எங்கள் தீனமான நிலைமையைக்கண்டு மனமிரங்கி, அவ்விருவரும் எங்களைக்காப்பாற்றுவதாய் வாக்களித்தார்கள். அப்படியே நாங்கள் அவர்களரண்மனையிலிருந்து வளர்ந்து வந்தோம். என் தமையன் ஒருவாரத்துக்கொருமுறை வந்து எங்கள் யோகக்ஷேமங்களை விசாரித்துப் போவார். இவ்வாறு 10 வருஷ காலங்கள் கழிந்தன. பிறகு எக்காரணத்தாலோ என் தமையன் வருவதில்லை. நான்

மணிபுரம் சென்று எங்களுக்குச் சொந்தமான சிறு தோட்டத்தை விற்று வரலாமென்று வந்தேன். என்னை இரண்டு பாதகர்கள் பிடித்து வந்து இக்கோட்டைக்குள் அடைத்தார்கள்.

நான் அடைபட்டது இப்பொழுது மணிபுரம் ஜமீந்தார் ஏவுதலினாலென்றும் அதற்காக அவர் மாதம் எவ்வளவோ தொகை இக்கோட்டைத் தலைவர்களுக்குக் கொடுத்து வருவதாயும என்னைக் கொன்றுவிடும்படி யவர் ஆணையிட்டிருப்பதாகவும, அவ்வாறு செய்துவிட்டதாய் அவருக்குப்பொய் சொல்லிவிட்டதாகவும, கொன்றுவிட்டால் பிறகு தங்கள் தயவு ஜமீந்தாருக்குத் தேவையில்லாமல் போய்விடுமென்று, என்னைக் கொல்லவில்லை யென்றும் நான் அறிந்துகொண்டேன். என் சௌக்கியத்துக்கும் சௌகர்யத்துக்கும் யாதொரு குறைவும கிடையாது. என்னை ஹிம்சிக்கவாவது மானபங்கம் செய்யவாவது ஒருவரும் துணியவில்லை.

முன் ஜமீந்தாரின் ஆண் சிசுவும் இறந்ததாகவும், அக்குழந்தையும் புதைபட்டிருப்பதாயும், ஊரில் பரவியிருக்கும் வதந்தி முழுமையும் கற்பனையே யொழிய நிஜமல்ல. முன் ஜமீந்தாரின் மகன் பாலூர் மகாராஜாவின் அரண்மனையில் மாதவன் என்ற பெயருடன் வளர்கின்றான். அவனுக்கு இப்பொழுது 20, 22 வயதிருக்கலாம. ஐயோ! என் குழந்தை—என் வயிற்றிற் பிறந்த குழந்தையைப்பார்க்கிலும் பதின்மடங்கு வாஞ்சையுடன் வளர்த்தேனே! குழந்தையை எப்பொழுது காண்பேன்" என்று கோவென்று கதறிக்கொண்டு வேஷதாரியின் கால்களில் வீழ்ந்து மூர்ச்சையானாள்.

(இன்னும் வரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A. B. L.

மனிதர்க்கு நல்லுணவு மாமிசமா? காய்கறியா?

மனிதர்களின் சரீரபுஷ்டி ஆயுசுவிர்த்தி அறிவு வளர்ச்சி முத லியவற்றிற்கு ஏற்றவுணவு மாமிசமா காய்கறியா என்று ஆராய்ந்து அவ்வவற்றின் குணகுணங்களை விளக்கி நமது பாநுவில் வெளியிட வேண்டுமென்று நமது நண்பர் சிலர் விரும்பியவண்ணம் இந்த வியாசத்தை வெளியிடுகிறோம். இவ்விஷயத்தைப்பற்றி அமெரிக் காகண்டத்து நியூயார்க்குப் பட்டணத்தில் சாகபட்சகர்சபையிலே சுவாமி அபேதானந்தராற் செய்யப்பட்ட ஆங்கில உபந்யாசத்தின் மொழி பெயர்ப்பாக மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளி யிடப்பெற்ற "இந்து சாகபக்ஷணியாயிருப்பதேன்" என்ற வியாச த்தையும், மற்றுமுள்ள தமிழ் நூல்களையும் ஆதாரமாகக்கொண்டு இதனை எழுதப்புகுந்தனம்.

பல்லாயிர வருடங்கட்கு முன்னரே இவ்விஷயத்தை நீள நினைந்து ஆராய்ந்து மனிதர்க்கு நல்லுணவு காய்கறி வகைகளே யெனக்கண்டறிந்து ஒழுகியவர்கள் நம் ஹிந்துக்களேயாவர். மற் றத்தேசத்தவர்கள் நம்மிடமிருந்தே இந்நற்பழக்கத்தை முதலிற் கண்டறிந்தார்கள். மாமிசபக்ஷணங் கூடாதென்று யுக்திக்கும் சாஸ் திரத்துக்கும் பொருந்துமாறு காரணங்காட்டி நமது இருஷிகள் எத் தனையோ நூல்களை யெழுதி வைத்துள்ளார்கள். சரித்திரம் ஏற்ப டாத மிகப்பழைய காலத்திலேயே இப்பழக்கம் நம்மவர்களிடமிருந் ததாகும். பிதா கோரர் என்ற கிரேக்க ஆசிரியர் நம்மவரிடமிருந் தே இதனைக்கண்டறிந்தாரென்று சரித்திரம் வல்லார் கூறுகின்றனர். அமெரிக்கர் முதலிய மேற்றிசை யார்கள் புலால் மறுத்தலை மேற் கொண்டவர்களாகி இதற்கெனவே சபைகளை ஏற்படுத்தியிருக்கின் றார்கள். இச்சபையில் லட்சக்கணக்கான அங்கத்தவர்கள் சேர்ந்து பாராட்டி வருகின்றார்கள். அந்நியநாட்டார்கள் புலாலுண்ணாமை யின்பயனை நம்மிடமிருந்து தெரிந்து கையாண்டு அபிவிர்த்தியடை யும் நாகரீகம் மிக்க இக்காலத்தில் நம்மவரில் (இந்துக்களில்) பெரும் பாலார் புலாலுண்பவர்களாயிருப்பதைக் காண்பது எத்துணை அவ மானமான காரியம்.? புலாலுண்ணாமை தமது குலவொழுக்கமாகப் பரம்பரையிற் கொண்டிருந்த உயர்வகுப்பாரிற் சிலரும் தற்காலத்து

நாகரீகம் பேசிப் புதிதாகப் புலாலுண்ணப் புகுகின்றனரே. இது எவ்வளவு பரிதாபமான நிலைமை? மற்றும் சில ஜாதியார்கள் ஆதியில் மாமிசம் புசியாத வகுப்பினராயிருந்தும் காலாந்தரத்தில் வேற்றுத்தேசவாசமும் மிலேச்சர் சகவாசமும் கொண்டு தமது பூர்வ நிலையை முற்று மறந்து தாமும் மாமிசபக்ஷணிகளாயிருக்கின்றனர். "நோன்பென்பது கொன்று தின்னாமை" என்பதையறியாது விரத காலங்களிற் கூடப் புலாலுணவை விசேடமாகக் கொள்கின்றனர். இச்செயல் கொடுமையினுங்கொடுமையேயாகும். தற்காலத்துப் பிரசித்திபெற்ற ஆங்கிலவயித்திய நிபுணர்களும் ஆகார முறையைச் சீர்திருத்துபவர்களும் மனிதர்க்கு ஏற்றவுணவு காய்கறி பதார்த்தங்களே எனக் கண்டறிந்து வெளியிட்டு வருகின்றார்கள்.

மாமிசவுணவு அஜீர்ணம், குன்மம், கீல்வாய்வு, க்ஷயம் முதலிய அநேக வியாதிகட்குக் காரணமானதென்றும், உண்பதற்காகவே கொழுக்கவளர்க்கப்பட்ட ஆடு கோழி முதலியவை முறைதப்பிய வுணவு கொடுக்கப்படுவதால் ஏதேனும் ஒருவித நோய்க்கு வித்தாக வேவளர்கின்றனவென்றும், இவற்றின் மாமிசங்களின் மூலம் சில விஷக்கிருமிகள் மனித சரீரத்துட்புகுந்து பலவித கெடுதிகளைச் செய்கின்றனவென்றும் மருத்துவசாஸ்திர நிபுணர்கள் காரணங் காட்டி விரித்தெழுதியுள்ளார்கள். மாமிசவுணவு உடம்பில் ரத்த மிகுந்து சூடு அதிகப்பட்டு ரத்தாசயத்தின் தொழில் அளவுக்கு மிஞ்சி நரம்புத்தளர்ச்சி அதிகரித்து உயிர்வலிமைகுன்றி அவதிப் படுதற்கே ஏதுவாகின்றது. உடற்கூறு அறிந்த சாஸ்திரிகள் மனிதனுடைய பற்கள் இரைப்பை ஆகாரக்குழல் இவைகளின் அமைப்பையும், ஜீர்ணிக்கும் தன்மையையும் உற்று நோக்கிப் பரிக்ஷித்து மனிதன் தழை குழை முதலிய சாகபக்ஷணிப் பிராணிகளையே யொத்திருக்கின்றான். மாமிசபக்ஷணிப் பிராணிகளை யொத்திருக்கவில்லை. ஆனதால் மாமிசவுணவு மனிதருக்கு ஏற்றதன்று என்கிறார்கள்.

மாமிசங்களின் இயற்கைத்தன்மையையும் தழை குழை காய் கனி முதலிய சாகபக்ஷணங்களின் இயற்கைத்தன்மையையும் பரிக்ஷித்துப் பார்த்தால் தசைவளரவும் நரம்புகள் பலப்படவும் சரீர புஷ்டி கொள்ளவும் வேண்டிய சத்துக்கள் தாதுவர்க்கமாகிய சாக

பக்ஷணங்களில் தான் நிறைந்திருக்கின்றன என்பது தெளிவாகும். சரீரவளர்ச்சிக்கு ஆதாரமான கொழுப்பும் லோக வஸ்துக்களும் மாமிசங்களில் இருப்பதினும் காய்கறி வகைகளில் அதிகமாகவே இருக்கின்றன. அன்றியும் மாமிசவர்க்கத்தில் இல்லாத சில சத்து வர்க்கங்கள் காய்கறிவகைகளில் இருக்கின்றன. இது மட்டோ! மாமிசங்களிலுள்ள கெட்ட வஸ்துக்கள் காய்கறி வர்க்கங்களில் சிறிதும் இல்லை. கசாப்புக்கடையிலிருந்து மாமிசத்தைக்கொண்டு வரும் போதுபார்த்தால் மாமிசபக்ஷணிக்கும் அருவருப்பே யுண்டாகும். சிலர் வாந்தியெடுப்பதுமுண்டு. காய்கறி பதார்த்தங்களைக்காணும் பொழுதே மனோரம்மியமுண்டாகும்.

இவ்வாறிருக்கவும் மாமிசமுண்ணும் வழக்கம் மனிதர்கட்குள் எப்படிவந்ததென்ற கேள்வி பிறக்கலாம். இக்கேள்விக்கு விடையாகச் சரித்திர காரர் கூறுவதாவது:—ஆதியில் மிருகப்பிராயமாகத் திரிந்த ஜனங்கள் அவ்வப்போது கிடைத்த காய்கறிவகைகளைப் புசித்து உதராக்கினியைத்தணித்து வந்தனர். அவை எக்காலத்தும் வேண்டுமளவு கிடைத்தல் அருமையாதலின் வயிற்றின் கொடுமையால் சிறிய பிராணிகளைத்தின்னத் தொடங்கினர், பின்னர் உழவு தொழிலையறிந்து ஆகாரத்துக்கு வேண்டும் பொருள்களையெல்லாம் உற்பத்தி செய்துகொண்டனர். பின்னர் வரவர எல்லாப் பொருள்களின் குணகுண பரிசீலனைசெய்து உண்ணத்தகாதவற்றை யொழித்து உண்ணற்குரியவற்றையே யுண்டுவாழ்வாராயினர். இங்ஙனம் வயிற்றின் கொடுமைபற்றிவந்த கெட்டபழக்கத்தால் மாமிசபக்ஷண நிகழ்ச்சியுண்டானதன்றி இயற்கையமைப்பில் அது ஏற்பட்டதன்று. இயற்கையமைப்பு சாகபக்ஷணமேயாகும். இங்ஙனமின்றி மாமிச பக்ஷணம் இயற்கையமைப்பென்பது அறியாமை யல்லது வேறில்லை. தற்காலத்தில் குதிரைகளை மாமிசமுண்ணப் பழக்கலாம். குரங்குகளை வண்டிநடத்தவும் காபி டீ குடிக்கவும் பழக்கலாம். கரடிகளை சுருட்டுக்குடிக்கப் பழக்கலாம். இவைகளெல்லாம் பழக்கத்தால் வந்தனவேயன்றி இயற்கை யமைப்பென்று கொள்ளக் கூடுமோ? ஆகவே மாமிச பக்ஷணம் பழக்கத்தினால் வந்தகொடுங்கேடேயென்பது நிச்சயம்.

"தெள்ளறிவு, அழகு, நோயற்றவாழ்வு, சரீரவலி, மனவலி, ஆத்மசுகம் இவைகளை வேண்டுபவன் ஊனுண்ணாதிருக்கக்கடவன் என்பது மஹாபாரதம்.

இவ்வாறாக நம் இந்துக்கள் பெரும்பாலாரிடம் பழக்க வலிமையால் நாளடைவில் வேரூன்றிப் புகுந்துள்ள புலாலுணவைப் பற்றிய தீமைகளை நன்கு ஆராய்ந்த விவேகிகள் முற்றும் விலக்கிவருகின்றனர். விவேகத்தாலும் மனோதிடத்தாலும் விலக்குதற்குச் சக்தியற்ற வேறு சிலரோ தத்தமக்குத் தோன்றியவாறு வாதிக்கமுற்படுகின்றார். இவர் கூறும் வாதங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

(1) பரம்பரையிற் றின்றுவந்த பழக்கமாதலின் குற்றமில்லையென்பா ரொருசாரார்.

(2) புலாலுடம்பிற்குப் புலால்தான் பலம் தருவதென்பா ரொருசாரார்.

(3) விசுவாமித்திரர் முதலிய மஹான்கள் புலாலுண்ணவில்லையா வென்பாரொருசாரார்.

(4) கண்ணப்பநாயனார் கடவுளுக்கு நிவேதிக்கவில்லையா வென்பா ரொருசாரார்.

(5) இத்தனைகாலம் தின்றுவிட்டு இனி நிறுத்துவதால் பயனில்லையே யென்பாரொருசாரார்.

இவ்வாறு கூறுபவர்க்கு முறையே நியாயங் கூறி மறுத்து மேற் சொல்வாம்.

(1) பரம்பரைப் பழக்கமெல்லாம் கொள்ளத்தக்கனவென்பதும் புதியபழக்கமெல்லாம் தள்ளத்தக்கன வென்பதும் பொருந்தா. பரம்பரைப் பழக்கமாயினும் தீமைகண்டபோது நீக்கவேண்டும். நூதனப் பழக்கமாயினும் நன்மையிருப்பின் சேர்க்கவேண்டும். ஒவ்வொருசெயலிடத்தும் நன்மை தீமைகளை யாராய்ந்து கொள்ளுதலும் தள்ளுதலும் வேண்டுமென்றி காலத்தின் நீட்சிகருதி தீமையென் றறிந்தபின்னும் தள்ளலாகாதென்பது பொருந்தாது. "தொன்மையவாமெனு மெவையு நன்றாகா இன்றுதோன்றிய நூலெனு மெவை

யும் தீதாகா" என்பது ஆன்றோர் கூற்று. களவு தொழிலையே செய்து வந்த கள்ளர் சாதியிற் பிறந்த வொருவன் அறிவுடையனானபொழுதும் பரம்பரைத் தொழிலென்று திருடப்புகலாமோ? அத்திருட்டை அரசாங்கத்தார் அறிந்தால் இவன் குலத் தொழிலைத் தானே செய்தானென்று தண்டனை செய்யாது விடுவாரோ? பரம்பரைத்திருடனுக்கு அதிகத் தண்டனை யன்றோ விதிப்பார்கள்? ஆதலின் பரம்பரைப் பழக்கமாயினும் அதன் தீமையை யறிந்த பின்னர்நீக்குதலே முறையாகும்.

(2) புலாலுடம்புக்குப் புலால் நலஞ்செய்வதில்லை யென்பதை மேலும் விளக்குவோம். மாமிசபக்ஷணிகளாகிய சிங்கம் புலி முதலியன 30 அல்லது 40 வருஷங்களுக்கு மேல் ஜீவிப்பதில்லை. சாகபக்ஷணியாகிய யானையோ 300 வருஷங்கள்வரை ஜீவிக்கின்றன. தொத்து வியாதிகளான பேதி வைசூரி பிளேக் முதலியவை மாமிசபக்ஷகர்களிடத்துப் பரவுகின்றனவே யல்லது சாகபக்ஷகர்களான சுத்தபோஜன முடையவர்களிடம் பரவக்கண்டிலேம். மாமிசபக்ஷகர்களைப் பார்க்கிலும் சாகபக்ஷகர்கள் சத்துவகுண விசேடமும் புத்தி கூர்மையும் தேகாரோக்கியமும் அழகும் பெற்றிருத்தல் பிரத்தியக்ஷமே. இந்தியப்படையில் சீக்கிய காலாட்படையிருப்பதை யாவருமறிவர். இப் படைவகுப்பினரைப் போல பலமும் வீரமும் உறுதியுமுடைய சுத்த வீரர்கள் ஆங்கில காலாட் படைகளில் கூடயாருமில்லை. யுத்தகளத்திற் பின்வாங்குதல் இவர்கட்குத் தெரியாது. கைச்சண்டையில் ஒருசீக்கியன் ஏனைய மூன்று பேருடன் எதிர்த்துத் தாக்குவான். ஆனால் இச்சீக்கியர்கள் புலாலுண்பதில்லை. சாராயங் குடிப்பதில்லை. சுருட்டுப்பிடிப்பதில்லை. அப்படியிருந்தும் இவர்களை விடப் பலசாலிக ளில்லையெனப் பெயர் பெற்றுள்ளார்கள். தானிய வுணவுண்ணும் கோடிக்கணக்கான ஸ்காட்டுமேன்கள் நோயற்றுப் பலமுற்று அறிவிற் சிறந்து இருக்கின்றார்கள். ஜர்மனியில் ஏழு மல்லர்களுடன் நடந்த பந்தய வோட்டத்தில் மாமிஷ பக்ஷகர்களைப் பார்க்கிலும் சாகபக்ஷகனான ஒருவனே வெற்றிபெறக் கண்டார்கள். மூடத்தனமான மூர்க்கத்துவத்தை வீரமென்றும் பலமென்றும் கருதுவது தவறு. ஒரு குதிரையை ஒரு புலி கொல்லும். இதனால் குதிரையினும் புலி பல

முடையதாகுமா? ஒரு பெரும்பாரத்தை நெடுந்தூரம் இழுத்துச் செல்லும் தசைவலி குதிரைக் குள்ளதேயன்றிப் புலிக்குண்டாகுமா? ஒருயானையை ஒருசிங்கம் கொல்லும். இதனால் யானையின்பலம் சிங்கத்துக் குண்டென்னலாமோ? ஆயிரம் பவுண்டுக்கு மேற்பட்ட நிறையுள்ள ஒரு பீரங்கியை யானை தூக்கும். சிங்கம் தூக்குமா? மாமிஷ பக்ஷணிகளான புலியும் சிங்கமும் மூர்க்க குணமுள்ளவைகளே யல்லது குதிரையையும் யானையையும் போல் பலமுள்ளவைகளாகுமா? இதனால் தேகவலிமைக்கு ஏற்றது சாக பக்ஷணமேயன்றி மாமிசபக்ஷணமன்று என்பதும், மூர்க்கத் தனமே மாமிஷபக்ஷணத்தால் வருமென்பதும் நிதர்சனமன்றோ? இதுபற்றியன்றே "ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே" என்றார் பெரியோர்.

(3) தவவலிமையால் சாபாநுக்கிரஹ சீலர்களாக விளங்கும் விசுவாமித்திரர் முதலிய பெரியார்" எவ்வுயிரும் பராபரன்சந் நிதியதாகும் இலங்குமுயி ருடலனைத்தும் ஈசன் கோயில்" என்றவண்ணம் உலகத்தில் தோன்றும் எல்லாப் பொருள்களையும் ஈசுவராம்ஸமாகக்காணும் ஞானநோக்குடையராதலின் அவர்கள் கடாட்ச வீக்ஷணத்திலீடுபட்ட பொருள்கள் யாவும் மஹா புனிதப் பொருள்களாய்விடுகின்றன. சத்துவகுண மேலீட்டால் கண்டனவெல்லாம் கடவுள் வடிவாகக் கொண்டு "ஓடுஞ்சரி பொன்னுஞ்சரி, உறவுஞ்சரி பகையுஞ்சரி, வீடுஞ்சரி காடுஞ்சரி, மேலுஞ்சரி கீழுஞ்சரி" எனக் கருதுவார். அப்பெரியார் செயல்களைப்பற்றி ஆராய்தற்கு நாம் யார்?

"ஆனைமதப் பட்டால் அலங்காரம் ஆகும் நாய்
தானுமதப் பட்டால் சரியாமோ—ஞானி
தடைமீறி னாலும் சரியாகும் கன்மி
கடைமீறல் ஆகாது காண்"—என்பது இவண் கவனிக்கற்பாலது. ஞானிகள் செயலை நாம் பின்பற்றுதற்கு அருகரல்லேம். விசுவாமித்திரர் திரிசங்கு சுவர்க்கத்தைச் சிருஷ்டித்தனரே. அது போன்ற அற்புதச் செயல்கள் எத்தனையுண்டு? அவற்றிலொரு சிறு செய்கையேனும் நம்மாலாகுமா?

(4) கண்ணப்ப நாயனார் புலாலுணவைக் கடவுளுக்கு நிவேதனம் செய்ததும், பரம கருணாநிதியாகிய எம்பெருமான் அதனை அமுதினுமினிதாக ஏற்றருளியதும் உண்மையே. அப்புண்ணிய மூர்த்தியைப்போல அன்பு கசிந்து தன்னையு மறந்து இருகண்களையும் தோண்டிச் சாத்தும் திடபக்தி முதிர்ச்சி நமக்கும் வந்தால் நமது செயல்களில் குணாகுண ஆராய்ச்சிக்கு இடமில்லையாம். எப்பொழுதும் மாய வலைக்குட் சிக்கி யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களில் மூழ்கிக்கிடக்கும் நமது சிறுமை யெங்கே! அவரது பெருமை யெங்கே! அணுவுக்கும் மேருவுக்குமுள்ள வித்தியாசத்தினும் அதிகப்படுமன்றோ? விரிக்கிற் பெருகும்.

(5) இத்தனை நாள் வரை புலாலுண்டு வந்தமையால் இனி விடுவதில் பயனில்லை யென்பது பொருந்தாது. அறியாமையாற் செய்த இழிதொழில்களை யெல்லாம் அறிவு வந்தபோது நீக்கி விடுவது தான் அறிவின் பயனாகும். உலகியலும் அதுதான். பாலப்பருவத்தே ஆடை யுடுத்தாது மலமூத்திராதிகளைக் கையாலளைந்து மேலெல்லாம் பூசிவந்த குழந்தை, குமாரப்பருவம் வந்ததும் ஆடைபுனைதலும் மலமூத்திராதிகளைக் காணினும் அருவருப்பெய்துதலும் இயல்பன்றோ! பாலப்பருவத்தே நின்ற நிலையை விடாது ஆடையின்றித் திரியினும் மலமூத்திராதிகளைத் தீண்டினும் உலகர் பரிகசித்துப் பயித்தியகாரன் என்று எள்ளியிகழ்ந்து கல்லெறி தருவாரன்றோ? ஆதலின் அறிந்தவழி நீக்கலேயறிவுடைமையாகும்.

இனி பொது வகையாக ஆராய்வாம். புல் மரம் ஈ எறும்பு பக்ஷி மிருகம் மனிதன் இவை யனைத்திற்கும் உயிரும் மனமும் சுக துக்கங்களுமுண்டு. அறிவு வகையில் ஏற்றத்தாழ்ச்சி யுண்டு. உயிரும் மனமும் இன்ப துன்பங்களும் எல்லாருக்கும் ஒன்று போலவே யிருக்கின்றன. இப்போது மனித வர்க்கத்திற் பிறந்திருக்கும் நாமும் முன்னொரு காலத்தில் புல் முதலியனவாகத் தோன்றி யிருந்தவர்களே யென்பது தான் இந்து மதக்கொள்கை. "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல் விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்ச், செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்

தேன் என்பெருமான்'' என்று ஸ்ரீவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளியிருப்பதும் இக்கருத்தையே வலியுறுத்தா நிற்பதாகும். கீழான பிராணிகளுக்கு ஆத்துமாவில்லை மனமில்லை என்று கூறும் கிறிஸ்தவர் கொள்கையை நம் இந்து மதம் மிகவும் வெறுத்துத் தள்ளுகின்றது. தர்க்க முறைக்கும் இக்கொள்கை நிற்காது. இதுமிகவும் அசம்பாவிதக் கோட்பாடென்று நம்மவர் கண்டித்துள்ளார்கள். உயிர்களில் சிறு உயிர் பெரிய உயிர் என்ற பேதமே கிடையாது. எல்லாவுயிர்களும் அதன் அதன் வினைக்குத் தக்கபடி இறைவனு லருளப்பட்ட தநு கரண புவனபோகங்களை யடைகின்றன. உருவங் குணஞ் செயல்களில் வேற்றுமைப் பட்டிருப்பினும் மனம் எல்லாவுயிருக்குமுண்டு. இன்பத்தில் விருப்பமும் துன்பத்தில் வெறுப்பும் எல்லாவுயிருக்கும் உண்டு. சகல உயிர்களிடத்தும் வேற்றுமை யின்றி ஒரேவிதமாக எள்ளினுள் எண்ணெய்போல் அந்தர்யாமியாய் நிறைந்திருத்தல் இறைவனது இயற்கைத் தன்மையாகும். ஆத்ம அறிவானது உலோகவர்க்கங்களினும் உண்டு. அதை விட தாது வர்க்கத்தில் அதிகமுண்டு. அதைவிட ஜீவவர்க்கத்தில் அதிக முண்டு கண்ணுக்குப் புலப்படாத பரம சூக்குமமான புழுப்பூச்சிகட்கும். மனமுண்டு. அவற்றிற்கும் வலி தெரிகிறது. துன்பத்திற்குத் தப்ப வழிதேடுகின்றது. எந்தச் சிறிய செந்துவாயினும் தனக்கு மரணம் வருவதாக அறிந்தவுடன் துடிதுடிக்கின்றது. மரணத்தைத் தடுக்க முயலுகின்றது. சோகமுறுகின்றது. உயிர் வாழ விரும்புகின்றது. உயிர் நமக்கெப்படி அருமையோ அப்படியே சகல பிராணிகளுக்கும் அருமையாகவே யிருக்கிறது. சாவைக் கண்டு நாம் அஞ்சுவது போலவே சகல பிராணிகளும் அஞ்சுகின்றன. நம்முடைய ஆத்மாவுக் குள்ளிருக்கும் பரம் பொருளே அற்ப செந்துக்களின் ஆத்துமாவினுள்ளும் வீற்றிருக்கி றார். இவ்விதவுண்மையை நமது சமயசாஸ்திரங்கள் நன்கு விளக்கிக் கோஷிக்கின்றன. இப்படி யிருக்க, நமது வயிற்றுக் குழியைச் சற்று நேரம் நிரப்பிவைப்பதான அற்ப சுகத்துக்காக ஒரு பிராணியின் வாழ்நாள் முழுதும் அனுபவிக்கும் இன்பத்தைக் கெடுத்து அதனைக் கொன்று தின்பதென்றால் இது எவ்வளவு அறிவீனம்? தற்காப்பிலும் அறிவிலும் பலத்திலும் நம்மை விடக்குறைந்த

பிராணிகளை நாம் கொன்று தின்பது நியாயமென்றால்; நம்மை விட அதிக பலம் வாய்ந்த ராக்ஷதர்களாதியோர் நம்மைக் கொன்று தின்பதும் நியாயந்தா னென்று ஒப்புவோமோ? "நமது வயிறு நிரப்பச் சாக பக்ஷணமே போதுமானதாகவும் ஏற்றதாகவு மிருக்க அவ்வயிற்றினுள் சிறந்த பிராணிகளை யிட்டு அடைக்கின்றோமே" என்று ஜைந ஞானியாரொருவர் முறையிடுகின்றார். " தொக்க, விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலங்கெட்ட, புல்லறிவாளர் வயிறு" என்ற நாலடியாரின் கருத்து மிதுவேயாகும். "இன்பம் வேண்டி யெந்தப் பிராணியையும் கொல்லாதே; பிரகிருதியிலுள்ள எல்லா வற்றிலும் ஒற்றுமையான உயிருள்ளது எதுவானாலும் அதற்கு அனுகூலியாயிரு" என ஆரிய வேதம் கற்பிக்கின்றது. அதாவது உண்ண வேண்டியேனும் வேடிக்கை கருதியேனும் எந்தப் பிராணியையும் கொல்லாதே என்பதாம். பிழைப்புக்கு வழியற்றபோது பறவைகளும் விலங்குகளும் ஒன்று மற்றொன்றைத் தின்பதுபோல் நாமும் புலாலுண்பது நியாய மென்பாருஞ் சிலருளர். இந்த நியாயம் மிருக நியாயமாகுமே யன்றி மனிதர்க்குரிய நியாய மாகுமா? ஆகாது. ஒருபோதுமாகாது. மரணம் வந்தாலுங்கூட இழிதொழிலாற் றாழ்ந்தவர் கைப்பொருளை வாங்கி யுண்டல் கூடாதெனை விலக்கி "தன்னுடம்பின் ஊனக் கெடினும் உண்ணார் கைத்துண்ணற்க" எனப்போதிப்பதே மனித நியாயமாகும். மரணம் நேர்ந்தாலும் இழிதொழிலாளர் பொருள் கொண்டுண்ணலாகாதென விலக்கும் மனித நியாய முறையில் புலால் புசித்தல் கூடுமெனக் கொள்வது எங்ஙனம் பொருந்தும்?

பிராணிவதை அல்லது பிராணி இம்சை யென்பது மூன்று வகுப்பாகப் பிரிக்கப்படும் (1) தானேசெய்யல் (2) தான்செய்வித்தல் (3) பிறர்செய்யத் தான்சம்மதித்தல்; இம்மூவகையாலும் ஒருவன் பிராணிகளுக்கு இம்சைசெய்யானாயின் எந்தப்பிராணிகளும் அவனை வருத்தா. புலி முதலிய துஷ்டமிருகங்களாயினும் நாம் மனதார அதை இம்சிப்பதில்லையென் றிருப்பின் அவையும் நமக்கு ஒருபோதும் துன்பஞ்செய்யா. எத்தனையோ முனிவர்கள் கானகங்களில் புலி முதலிய மிருகங்களோடு வாழ்ந்துவருகின்றனர்; அம்முனிவர்கள் எந்தப்பிராணிகட்கும் துன்பம்செய்யாத ஜீவகாருண்யசீலர்களாத

லாற்றான் எந்தப்பிராணிகளும் அவர்கட்கு நட்பாகியிருக்கின்றன. இனி சம்மதித்தல் என்பதுயாதெனில் கசாப்புக்கடைக்காரன் விற்கும் புலாலை நாம் வாங்கியுண்பதால் அவன்செய்தகொலைப்பாதகத்திற்கு நாம் சம்மதித்தவராகின்றோம். இதனால் கொலைப்பாவம் நம்மைவிட்டபாடில்லை. இக்கருத்தை "தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின் யாரும், விலைப்பொருட்டா லூன்றருவா ரில்" என்னும் பொய்யில் புலவர்திருவாக்கும் வலியுறுத்துமாறு காண்க,

மாமிசபக்ஷணத்தால் கொலைப்பாவம் வருதல் ஒன்றோ? அதனை சீர்ணிப்பித்தற்காக மதுபானமும் கொள்ளவேண்டிவரும்; மதுபானமும் சேர்ந்தபின் அதன்வெறி மீறியபோது செய்யப்படும் பாவங்கட்கு எல்லையில்லையே; சகலபாவத்தொழில்களும் வந்துகுடிகொள்ளக்கூடும். முடிவில் மீளாநரகிற்கே ஆளாகவேண்டியதுதான். இக்காரணத்தாலும் புலாலுணவு வெறுத்தற்கேயுரியதாகும்.

சாந்தம் ஐக்கியம் தன்னடக்கம் முதலிய நற்குணங்களே ஆத்துமலக்ஷண அறிவு இருத்தற்கு அறிகுறிகளாகும். அவ்வறிவு விருத்திக்குப் புலாலுணவு முற்றும்பொருந்தாதாதலின் சாகபக்ஷணிகளான இந்துக்களே ஆத்துமஞானத்துக்கு விரைவிற் பாத்திரராதற்கு உரியவர்களாகின்றனர். இறைச்சி தின்புவர்கள் ஒருபோதும் மனத்தை யொருமுகப்படுத்த முடியாது. ஆத்துமலக்ஷண தெய்வலக்ஷணங்களைப்பற்றி ஆராயவும் முடியாது. ஆகவே மோக்ஷமெய்தவும் முடியாதென்பது சித்தமாகும். இவ்வுண்மைகளையெல்லாம் அறிந்தபின்னராவது நம் இந்து சன சமூகத்தார்கள் புலாலுணவை விட்டொழித்து அன்பும் அருளும் பெற்று இடையறாப்பேரின்பந் துய்த்து வாழ்வார்களாக.

" தம்மினும் உயர்ந்தோர் கீழோர் தமதிலத் தறலுண் பாரேல்
அம்மஅங் கவருங் கீழென் றவர்மனைப் புனலும் உண்ணு
இம்மனி தர்கள்தாம் சீச்சீ இழிஞர்தம் மலத்தை யுண்டு
விம்முடற் பன்றி யாதி விரும்பியுண் டுவப்ப தென்னோ?

"புலையுன்னும் புலைதீரப் புனலென்னும் புனல் மூழ்கி
அலைகின்ற முழுமூடர் அறிவென்ன அறிவென்னு

புலையன்றன் மலமுண்ணும் ஏமையுண்ணும் புலையற்குக்
குலமென்ன நலமென்ன கூகூ வென்றன கோழி.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே.

எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே."

என்னும் மேலோர் வாக்குகளைச் சிந்திப்போமாக.சுபம்! சுபம்!! சுபம்!!!

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

தமிழ் - அகராதி வேலையின் விவரம்.

இந்த அகராதியில், தமிழ்ப்பாஷையில் வழங்கும் எல்லாச் சொற்களும் அவற்றின் எழுத்துச் சேர்க்கை, உற்பத்தி, வெவ்வேறான பொருள்களுடனும், பிரயோகங்களுடனும், ஆராய்ச்சி செய்யப்படும்.

விஷயங்களுக்கு விரிந்த விவரங்கள் காட்டிச் செல்வது, "என் ஸைக் லோபீடியா" போன்ற நூல் முறைக்கே உரியதாம். ஆதலால், பதப்பொருள்களையே பெரும்பான்மை விளக்குதற்குரிய அகராதி முறைக்கு அவ்விவரங்கள் ஏற்றன ஆகா.

இவ்வகராதி சித்தப்படுத்துவதில் எங்கள் நோக்கங்கள் அடியில் வருமாறு:—

(a) தற்காலத்தில் கிடைக்கக்கூடிய நூல்கள் முதலிய சாதனங்களை நன்கு ஆராய்ச்சி செய்து அவற்றை உபயோகித்தல்.

(b) இதுவரை கிடைக்கப் பெறாத கையெழுத்துப் பிரதிகளிற் கண்ட அருஞ் சொற்களைச் சேர்த்தல்.

(c) இதுகாறும் கவனிக்கப்படாதிருந்த பழைய உயர்தரக் காவியங்களினின்றும் பொருள்களை விளக்கிக்காட்டுதல்.

(d) தவறாகக்கண்ட பொருளமைதிகளைத் திருத்தஞ் செய்தல்,

(c) தமிழ் நாட்டாரது தற்காலப்பேச்சு வழக்கில் உள்ள புதிய பதங்களைச் சேர்த்துக் கொள்ளுதல் என்பவைகளாம்.

மேற்கூறியவற்றைச் செய்து முடிப்பதில், தமிழ்ப்பண்டிதர் அனைவரும், தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தி கருதி ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களும் ஒத்துழைத்து, இவ்வரிய பெரிய காரியத்தை நிறைவேற்றிவைக்க விரும்புகிறோம்.

இவ்வாறு உதவிவேண்டி, மதுரை, தஞ்சை, சிதம்பரம், சென்னை, யாழ்ப்பாணம் இந்நகரங்களிலுள்ள தமிழ்ச் சங்கங்களையும், பாளையங்கோட்டைச் சைவ சபையையும்,—தத்தம் பக்கங்களில் வழங்கும் கீழ்க்குறித்த விஷயங்கள் பற்றிய பதங்களை, அவற்றின் சரியான பொருள் விவரங்களுடன், சேகரித்து எங்கட்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அவ்விஷயங்களாவன:—

(1) ஜாதிகளும் அவற்றின் வெவ்வேறு உட்பிரிவுகளும், வழங்கும் விசேட பதங்கள்.

(2) குலாசாரங்கள், அவ்வவ் இடங்கட்குச் சிறப்பாகவுள்ள வழக்கங்கள்.

(3) தொழில்கள், ஆயுதவகைகள், பாத்திரங்கள் முதலியன.

(4) மருத்துவ முறைகள், மூலிகைகள் முதலியன.

(5) சங்கீத சம்பந்தமாகவும், ஏனைய சாஸ்திர சம்பந்தமாகவும் உள்ள விசேஷ பதங்கள்.

(6) மதங்களின் பல்வகை விரதாநுஷ்டானங்கள், மதக் கொள்கைகள்.

(7) கையெழுத்துப் பிரதிகளிலும் மற்றவைகளிலும் கண்ட அகராதியமைப்பிற்கு வேண்டிய ஏனைய சாதனங்கள் என்பவைகளாம்.

இவற்றோடு, தமிழ்ப் பாண்டித்தியத்திற் சிறந்த வித்வான்கள் சிலரை இக்கமிட்டியின் "கௌரவ வித்வத் அங்கத்தவர்" ஆகத் தேர்ந்தெடுத்து உரிய காலங்களில் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டுக்கொள்ளவும் தீர்மானமாயிருக்கிறது.

இவ்வண்ணமாக, வின்ஸ்லோ, ராட்லர், போப், கதிரைவேற்பிள்ளை முதலிய பண்டிதர்களால் முன்னமே செய்யப்பட்டுள்ள பெரிய காரியங்களை மேலுந் தொடர்ந்து நடத்திச் சிறப்பிப்பதில், தமிழ் நாட்டார் எல்லாரும் தங்கட்குப் பாத்தியமுள்ளதாகவே எண்ணி வேண்டிய உதவி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

13—3—1613. }
மதுரை, }

J. S. CHANDLER,
Chairman.

* நெப்போலியனும் ஆங்கிலக்கலவனும்.

நெப்போலியன்மா னிடவதையால் வாய்ந்தபெயர்
அப்பால் இருகதி அவன்கதையை—ஒப்ப
உருக்குகுண பாகத்தை உள்ளுவதி லேயான்
விருப்ப முளனாகு வேன். (1)

போலோனில் அன்னோன் புரிந்திட்ட போர்முயற்சி
யாலைநம் தீவார் அனைவரும்போர்க்—கோலமுனம்
எய்தியபோ தாங்கிலெய ஏழையொரு நாவிகனைச்
செய்ததவன் நாவாய் சிறை. (2)

யானறியேன் ஏனோ இவனைக் கடற்கரையில்
தானலைய விட்டார் தனியின்றி—மேன்மேலும்
இன்னவுன்கா [illegible] இங்கிலண்டும்
தன் [illegible] நோக்கியே தான். (3)

புயல்மட்டும் தன்கலத்தைப் போந்திங்கி லாந்துக்
கயல்கொண்டு சேர்ப்பிக்கு மாயின்—புயலாரங்
நள்ளிரவிற் கண்விழிப்பும் நன்றென்றே எண்ணினன்தான்
உள்ள நிலையதனி னும். (4)

திருட்டிஅவ னுக்குப்பா தித்தொலையில் தன்முன்
பிரிட்டன்செல் பட்சிகளின் பின்பே—இருக[illegible] அரும்
காறுடனென் றெண்ணுகிறேன்—அன்னவைவெண் டோவர்
பாறை யுறுமால் பறந்து. (5)

ஓர்புறத்தி நித்திரையை உள்ளக் கவல்ஓட்ட
ஊர் நினைவால் ஆசைகன வுற்றந்தத்—தோர்காலை
வெற்றுப்பிப் பாய்ஒன்று வேலையின்மி தந்துகரை
உற்றிடுதல கண்டான் உவந்து. (6)

---

* இது தாமஸ் காம்பல் என்ற ஆங்கிலப்புலவரியற்றிய "Napoleon and the British sailor" என்பதன் தமிழ்மொழிபெயர்ப்பு.

அன்னதனை ஓர்குகையில் ஆங்கொளித்து நாள்பலவா
மன்முயற்சி செய்தும் மறைவாயும்—அன்னோன்
அறச்சிறிய புன்படகொன் றுற்றி அதனை
இறக்கினான் தண்ணீரி னில். (7)

அத்தன்நமை அன்னதிற்செல் லாதருள்க. செப்பவொணு
அத்தகைய கேவலமா ஆயதது—இத்தகைய
புன்படகில் அற்பப் புனல்பொய்கை யுங்கடக்க
என்றுமெவ ருந்துணிந்த தில். (8)

உவர்க்கடலை ஈதால் உழுது செலும் தீரர்
எவர்க்கும் மனநடுக்கம் எய்தும்—கவித்திடுகீல்
பூச்சு, திசைகாட்டி, பொருந்துகீழ்க் கட்டை பாய்
ஓச்சு துடுப் பொன்றிதற்குண் டோ? (9)

அடுத்த வனமரத்தி லார்கிளைகொம் பாதி
எடுத்துத்தான் செய்த இழிபடகைத்—தொடுத்து
முடைந்தான் நுரைத்தோங்கி மோதலையை அஃதால்
கடந்தே செலத்துணிந்தான் காண். (10)

ஆயினும்பி ராஞ்சீயர் அந்தக் கடற்கரையி
லேயவனைக் கைதிசெய்தார் ஏங்கிமனம்—சாய அவன்
செய்தபட கைப்பரிக சித்தார் இன்னோன் செய்தி
எய்தியநேப் போலியன்கா தில். (11)

யுத்தமுறுங் காலத்தும் யுத்தமிலாக் காலத்தும்
ஒத்த மனஅமைதி உள்ளோனாய்—அத்தத்தைக்
கட்டி நிற்கும் தன்னதியற் கைப்படிநின் றன்னியனைச்
சுட்டியுரைத் தானிந்தச் சொல்: (12)

"கிளையாலும் கொம்பாலும் கேவலமா கச்செய்
துளஇதிலிக் கால்கடக்க உன்னும்—தெளிவில்லாய்!
சங்கையற நீ இனிமை சான்ற ஒரு ஆங்கிலேய
மங்கையின்மேல் வைத்தாய் மனம்." (13)

புத்தகக்குறிப்பு.

வேளிர்வரலாறு:—இப்பெயர்கொண்ட சிறந்த நூலொன்றுநமது பார்வைக்குவந்தது. இதனை யெழுதியவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராதிபராயிருந்த வித்துவான்—ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்களே. இவர்கள் தமிழிலக்கிய இலக்கண வல்லுநரா தலுடன் பழைய சரித்திரா ராய்ச்சியிலும் வல்லுந ரென்பது செந்தமிழறிஞர் பலருமறிவர். 1905-ம் வருஷம் தமிழ்ச்சங்கக் கூட்டத்தில் அரங்கேறப்பெற்றுச் செந்தமிழில் வெளிவந்த இந்நூல் இப்போது புதிய சில குறிப்புக்களுடனும் திருத்தங்களுடனும் ஐயங்காரவர்களால் தமிழ்ச்சங்கப் பிரசுரமாக வெளியிடப் பெற்றிருக்கிறது. அன்றியும் செந்தமிழ் வளர்க்கும் பெருங்கொடை வள்ளலாகிய ஸ்ரீமத்-முத்துராமலிங்க சேதுபதி மஹாராஜா அவர்கட்கு உரிமையுடன் வெளியிடப்பெற்றிருத்தல் மிகவும் பாராட்டற் பாலதே. இந்நூலின் அருமையுணர்ந்தே நமது காருண்ய கவர்ண்மெண்டார் இர்ண்டெமீடியட் பரீக்ஷைக்குப் பாடமாக அமைத்துள்ளார்கள்; இதன்விலை அணா 8. மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரிடமும் நூலாசிரியரிடமும் விலைக்குப்பெறலாம்.

ஸ்ரீமாந் M. சின்னையசெட்டியாரவர்களின் வியாசங்களும் உபந்நியாசங்களும், என்ற தலைப்பெயருள்ள நூல்வெளிவந்துளது. இந்நூலின்கண் அநேக அருமையான நல்விஷயங்கள் சொற்சுவைபொருட்சுவை நிரம்ப அமைந்துள்ளன. பெரும்பாலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தங்களைப்பற்றியே எழுதப் பெற்றிருப்பினும் அவையனைத்தும் எனைச் சாதியாரும் அங்கீகரித்து மேற்கொள்ளத்தக்க வண்ணம் நுண்ணிய அறிவை விளக்கி எழுதப் பெற்றிருத்தல் மிகப் பாராட்டற் பாலது. வசனப் போக்குப் படிக்குந்தோறும் புதுமகிழ்வுறுத்த வல்லது. இத்தகைய அறிவு விருத்திக்கேற்ற சுவடிகள் இக்காலத்துக்கு இன்றியமையாதனவே. இதனை யெழுதிய ஸ்ரீ செட்டியாரவர்கள் பல்லாண்டு வாழ்ந்து இன்னும் இத்தகைய புஸ்தகங்கள் பல எழுதி உலகுக்கு மகிழ்வுறுத்தும்படி இறைவனருள்க.

வினைப்பகுபதவிளக்கம்:—இப்புத்தகம் யாழ்ப்பாணம் நாவலர்கோட்டம் ஸ்ரீமான்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் விரும்பிய வண்ணம் சுன்னாகம் வித்துவான்-ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் இயற்றியது. நமது பாரு அளவில் 44 பக்கங்களுடையது. தமிழ்கற்பார்க்குத் துணையாக வினைச்சொற்களின் பகுபதவுறுப்புக்களைப் பற்றிய விஷயங்களை விளக்கியெழுதியிருத்தல் மிகப் பாராட்டற்பாலதே, வினைச்சொற்பாகுபாடுகளையெல்லாம் இச்சிறு நூலால் நன்கு தெரியலாம். இதன் விலை சதம் 50. வேண்டுபவர்கள் இதனைச் செய்வித்தவராகிய யாழ்ப்பாணம் நாவலர்கோட்டம். ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

சமாசாரக்கொத்து.

புனலூர் லெக்ஷ்மி பேப்பர்மில்ஸ் விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. கட்டிடங்கள் யந்திரங்கள் 84 ஏக்கர் நிலம் ஆபீஸ் சாமான்கள் ஸ்டோர் சாமான்கள் யாவும் மொத்தமாக விற்கப்படும். வேண்டியவர்கள் முந்துங்கள்.

இதைப்பற்றிய விவரங்கள் தெரிய விரும்புவோர் நமக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

* * *

பூவாளூர்ச்சைவசித்தாந்தசங்கம்:— இச்சங்கத்தின் மூன்றாவது வருஷக் கொண்டாட்டம் நிகழும் பரிதாபிஸூ பங்குனிமீ 9, 10, 11, உ களில் நடைபெறும். ஸ்ரீமத் சென்னை சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள். 13. வித்துவான்கள் உபந்யாசஞ்செய்வார்கள், எனத் தெரியவருகிறது.

* * *

மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபை:—நிகழும் பரிதாபிஸூ பங்குனி மீ 12 உ காரைக்காலம்மையார் குருபூஜையும், அறிஞர்கள் உபந்யாசங் களும் இச்சபையாரால் விமரிசையாக நடத்தப் பெறும்.

* * *

மதுரைத் தமிழ்ச்சங்கம்:—இச்சங்கத்தின்மீது ஸ்ரீமத் சேதுபதி மஹா ராஜா அவர்கள் செய்திருந்த வழியில் வழக்கு ஒரு வகையான சமாதானஞ் செய்யப்பெறும் எனக் கேட்டு மகிழ்கின்றோம். சமாதானம் முடிந்த வுடன் விவரம் விளக்கப்பெறும்.

* * *

காரைக்குடி நகரத்தார் கலாசாலை. இவ்விஷயமாக இந்நகரத்தார்கள் 30000 ரூபாவரை தொகுத்துள்ளார்களாம். நாம் எதிர் பார்த்தபடி தமிழையே பிரதானமாகக் கற்பிப்பதாக இல்லை. பெரும்பாலும் ஆங்கிலக் கலாசாலையைப் போலவும் அதில் இயன்றவரை தமிழ் சமஸ்கிருதங்களை அதிகமாகவும் கற்பிப்பார்களாம். எங்ஙனமாவது கலாசாலை பெருகுவது நலமே.

பத்திராதிபர்.

உ

குமரன் துணை

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத்

தமிழ்ப் பத்திரிகை.

நான்காந் தொகுதி.

பத்திராதிபர் { ம. கோபாலகிருஷ்ணையர்.
மு. ரா. கந்தசாமிக் கவிராயர்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர், புரொப்ரைட்டர்.

வருஷ சந்தா ரூபா இரண்டு தான்.

மாணாக்கர்கட்கு வருஷசந்தா ரூ 1—4—0.

"வித்தியாபாநு" ஆபீஸ், வடக்காவணிமூலவீதி, மதுரை.
விவேகபாநு அச்சியந்திரசாலை.
மதுரை.

1913.

நான்காந் தொகுதியின் பொருளடக்கம்.

உள்ளுறை.	விஷயதானஞ்செய்தோர்.	பக்கம்.
அகராதிச்சொற்பரீக்ஷை	அ. குமாரசுவாமிப்பிள்ளை	௩௮௫
அநுதாபச்செய்யுட்கள்	ஜி. சதாசிவம் பிள்ளை மு. ரா. கந்தசாமிக்கவிராயர்	௬௪
அல்லின் பிரபுவின் மகள்	ம. கோபாலகிருஷ்ணையர்	௨௨௩
ஆடுகோழிகளின் அடைக்கல விண்ணப்பம்		௩௪௧
ஆராய்ச்சி	அ. முத்தையமுதலியார்	௧௨௮
ஆராய்ச்சிக்குச் சமாதானம்	பொ. முத்தையபிள்ளை	௧௪௭
ஆன்ம இலக்கணம்	ஷை	௧௦௫, ௧௬௪, ௨௧௫
ஆன்மாக்களும் முத்தியும்	மு. ரா. கந்தசாமிக்கவிராயர்	௧௩௬
இன்சொல்	பத்திராதிபர்	௬௭
உபாத்திம-மாணவர்களுக்கோர் உபதேசம்	ஷை	௨௩௭, ௨௬௯, ௩௦௧
உன் நிலைமையை நீயே திருத்திக்கொள்	A. கந்தசாமிப்பிள்ளை	௨௫௫
எறும்புகள்	பத்திராதிபர்	௧௩௩, ௧௭௩, ௨௦௫
ஐயவினாத்தொடர்விடை	அ. முத்தையமுதலியார்	௩௪௬
ஒரு பிழை திருத்தம்	மு. கதிரேசச்செட்டியார்	௧௯௮
கடவுளிலக்கணம்	பொ. முத்தையபிள்ளை	௩௮௭
கண்டனூர்வாசி பொய்யரல்லர்	கண்டனூர் வாசி	௬௩
கல்வி	மு. ராம. சோமசுந்தரஞ்செட்டியார்	௧௭௭
ஷை	N. திருவேங்கடம்	௨௫௯
கீழைச்சிவப்பட்டித்தலபுராணப்பிழைகள்	மு. கதிரேசச்செட்டியார்	௧௫௭
குருகல்வி	மு. ராம. சோமசுந்தரம்செட்டியார்	௧௬௮
குருபக்தி	நல்லகுற்றாலம்பிள்ளை	௧௪௦
கேள்வி	பத்திராதிபர்	௩௬௫
கொழுநனைப்பேணல்	மு. ரா. கந்தசாமிக்கவிராயர்	௧௮௯
சண்முகநாதபுரம் சபையும் பிரசங்கமும்	தேவைவாசி	௨௯௪
சமாசாரக்கொத்து	பத்திராதிபர்	௩௧, ௬௬, ௧௦௦, ௧௨௯, ௧௭௦, ௨௩௬, ௨௬௮, ௨௯௮, ௩௩௨, ௩௯௯
சமாசாரப்பத்திரிகைகள்	ஷை	௩௩

உள்ளுறை.	விஷயதானஞ்செய்தோர்.	பக்கம்.
சமாதானஆராய்ச்சி—அ. முத்தையமுதலியார்		கஅ0
சன்மார்க்கசபையின் 3-ம் வருஷபூர்த்திக் கொண்டாட்டம்	சன்மார்க்கன்	க0கூ
சிந்தாமணிசரித்திரம்—P. S. சுப்பிரமணிய ஐயர்		கஎ, ஙஎ, அ0, ககஎ, கசஅ, கஅஉ, உஉஅ, உருக, உசுக
சிவத்தியானம்—பத்திராதிபர்		ஙஙங
சிவாநுபூதிச்சித்தாந்தசங்கம்—க. சூரியநாராயணபிள்ளை		ஙருசு
தமிழ் அகராதி வேலையின் விவரம்—J. S. CHANDLER		ஙஉங
தாவரங்கள் பரவும் விதம்—வி. தியாகராஜய்யர்		கசக, உகக
திருக்குறட்பாயிர ஆராய்ச்சி—மு. இராகவையங்கார்		ஙரு0
திருக்குறள் மாட்சி—பொ. முத்தயபிள்ளை		ருச, எரு
திருச்செந்தின் மாலை—குமரதாசன்		உஎஎ
திருநீற்றின் பெருமை—சம்பந்தன்		உசுங
திருப்பரங்கிரிக்கட்புலமாலை—எல். ஏ. வெங்குஸாமிஐயர்		சுக
திருவேரகப்பதிகம்—கரந்தை முருகேசன்		உசஅ
நச்சினார்க்கினியர்—ரா. சேதுபதி		ஙஉஅ
நன்றி கூறல்—பத்திராதிபர்		க
நாட்டுக்கோட்டை வணிகமணிகளும் கல்வி விருத்தியும்	பத்திராதிபர்	கஅக
நெப்போலியனும் ஆங்கிலக் கலவனும்	ம. கோபாலகிருஷ்ணையர்	ஙஉரு
பழையமரத்தைப்பாதுகாத்தல்—வி. பி. சுப்பிரமணியமுதலியார்		ஙஅசு
பழக்கத்தின்பயன்—பத்திராதிபர்		உ
வ. பழ. சா. பழநியப்பசெட்டியாரவர்கள்—பிரிவாற்றுமை (பகுதி உ)		
ஷை இரங்கற்பாக்கள்—பலவித்துவான்கள்		ஷை
பாட்டியல்—அ. முத்தைய முதலியார்		உசச
பாரதசந்தேக வினாவிற்கு விடை—சு. வ. குமாரசுவாமி		கஉஅ
பாரதத்திலொரு சந்தேகம்—மு. ராம. சோமசுந்தரஞ்செட்டியார்		சுரு
பிரசங்கங்கள்—தமிழபிமானி		ஙருஅ

உள்ளுறை,	விஷயதானஞ் செய்தோர்.	பக்கம்.
பிரசங்கமும் வியாசமும்	பத்திராதிபர்	௧௦௧
பிழை திருத்தம்	எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்	௬௨
ஷை	பொ. முத்தையபிள்ளை	௧௭௩
புத்தகக்குறிப்பு	பத்திராதிபர்	௬௫, ௩௩௧
புத்தக வரவு	ஷை	௬௫
புதுவருஷவருகை	வெ. முத்துசாமிஐயர் B. A; L. T.,	௯
பெண்கல்வி	வெ நாராயணசாமி பிள்ளை	௬
போர்வீரன் கனவு	ம. கோபாலகிருஷ்ணையர்	௨௨௬
மணிமந்திர ஔடதம்	பொ. முத்தயபிள்ளை	௨௫, ௫௭
மனிதர்க்கு நல்லுணவு மாமிசமா? காய்கறியா?	மு. ரா. கந்தசாமிக்கவிராயர்	௩௧௩
மாரியம்மையின் உத்தரவு		௩௪௫
மாலினீமாதவம்	R. S. நாராயணசாமி ஐயர் B. A., B. L	௧௦, ௪௪, ௬௯, ௮௭, ௧௨௩, ௧௪௫, ௧௧௯, ௨௧௮, ௨௮௫, ௩௦௭, ௩௬௯
முத்திராராக்ஷஸம்	R. சேதுநாராயணசர்மா B. A., B. L.	௨௩, ௪௪, ௮௭, ௧௨௩, ௧௪௩, ௨௦௯
மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையும் தலைவர் நியமனமும்	காரியதரிசிகள்	௬௧
மேலைச்சிவப்பட்டி சன்மார்க்கசபை	மு. சிங்காரவேற் பிள்ளை	௯௮
வானம்பாடிக் கும்மி	ம. கோபாலகிருஷ்ணையர்	௨௮௮
ஸ்ரீமகவியவர்கள் நீதிவழிப் பிழைகள்	இராமசாமி பிள்ளை	௧௫௨
ஸ்ரீஙகோபாசாரியாரவர்கள் இரங்கற்பாக்கள்	ம. கோபாலகிருஷ்ணையர்	௧௨௯
	B. B. சுப்பராமையர்	௧௨௭

பத்திராதிபர்.